ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ விற்பெருவிழவும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ விற்பெருவிழவும் ॥

திருவல்லிக்கேணி

‡விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்⋆
    வேழமும் பாகனும் வீழச்⋆
செற்றவன் தன்னை புரம் எரி செய்த⋆
    சிவன் உறு துயர் களை தேவை⋆
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு⋆
    பார்த்தன் தன் தேர்முன் நின்றானை⋆
சிற்றவை பணியால் முடி துறந்தானைத்⋆
    திருவல்லிக்கேணிக் கண்டேனே (1)

வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை⋆
    விழுமிய முனிவர் விழுங்கும்⋆
கோதில் இன் கனியை நந்தனார் களிற்றைக்⋆
    குவலயத்தோர் தொழுதேத்தும்⋆
ஆதியை அமுதை என்னை ஆள் உடை
    அப்பனை⋆ ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும்⋆ மாட மா மயிலைத்⋆
    திருவல்லிக்கேணிக் கண்டேனே (2)

வஞ்சனை செய்யத் தாய் உருவாகி⋆
    வந்த பேய் அலறி மண் சேர⋆
நஞ்சமர் முலையூடுயிர் செகவுண்ட
    நாதனைத்⋆ தானவர் கூற்றை⋆
விஞ்சை வானவர் சாரணர் சித்தர்⋆
    வியந்துதி செய்யப் பெண் உருவாகி⋆
அஞ்சுவை அமுதம் அன்றளித்தானைத்⋆
    திருவல்லிக்கேணிக் கண்டேனே (3)

www.prapatti.com

இந்திரனுக்கென்றாயர்கள் எடுத்த⋆
எழில் விழவில் பழ நடைசெய்⋆
மந்திர விதியில் பூசனை பெறாது⋆
மழை பொழிந்திடத் தளர்ந்து⋆ ஆயர்
எந்தம்மோடின ஆநிரை தளராமல்⋆
எம் பெருமான் அருள் என்ன⋆
அந்தம் இல் வரையால் மழை தடுத்தானைத்⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே (4)

இன் துணைப்பது மத்தலர் மகள் தனக்கும்
இன்பன்⋆ நற் புவி தனக்கிறைவன்⋆
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை
தனக்கிறை⋆ மற்றையோர்க்கெல்லாம்
வன் துணை⋆ பஞ்ச பாண்டவர்க்காகி⋆
வாய் உரை தூது சென்றியங்கும்
என் துணை⋆ எந்தை தந்தை தம்மானைத்⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே (5)

அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்-
கிளையவன்⋆ அணி இழையைச் சென்று⋆
எந்தமக்குரிமை செய் எனத் தரியாது⋆
எம் பெருமான் அருள்! என்ன⋆
சந்தம் அல் குழலாள் அலக்கண்⋆ நூற்றுவர் தம்
பெண்டிரும் எய்தி நூல் இழப்ப⋆
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத்⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே (6)

பரதனும் தம்பி சத்துருக்கனனும்⋆
இலக்குமனோடு மைதிலியும்⋆
இரவும் நன் பகலும் துதி செய்ய நின்ற⋆
இராவணாந்தகனை எம்மானை⋆
குரவமே கமழும் குளிர் பொழில் ஊடு⋆
குயிலொடு மயில்கள் நின்றால⋆

www.prapatti.com

இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே (7)

‡பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்⋆
வாயில் ஓர் ஆயிர நாமம்⋆
ஒள்ளியவாகிப் போதவாங்கதனுக்கு⋆
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி⋆
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப்⋆
பிறை எயிற்றனல் விழி பேழ்வாய்⋆
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே (8)

மீன் அமர் பொய்கை நாள் மலர் கொய்வான்⋆
வேட்கையினோடு சென்றிழிந்த⋆
கான் அமர் வேழம் கைய் எடுத்தலறக்⋆
கரா அதன் காலினைக் கதுவ⋆
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து⋆
சென்று நின்றாழி தொட்டானை⋆
தேன் அமர் சோலை மாட மா மயிலைத்⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே (9)

‡மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும்⋆
மாட மாளிகையும் மண்டபமும்⋆
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன் மயிலைத்⋆
திருவல்லிக்கேணி நின்றானை⋆
கன்னி நன் மாட மங்கையர் தலைவன்⋆
காமரு சீர்க் கலிகன்றி⋆
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார்⋆
சுகம் இனிதாள்வர் வான் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com